# இந்தியாவின் புதிய பிரதமர் இந்திராவா, சவானா, மொரார்ஜியா?

Registered as a Newspaper in Ceylon    விலைசதம் 10

# ஈழநாடு

EELA NADU    தபாற் பெட்டி எண் : 49
மலர் 9    இதழ் 17
போன் : 389    National Tamil Daily    தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பராபவ மாசி 15 ஜுலை 16 திங்கட்கிழமை (27-2-67)

புதுடில்லி, பெப். 26
இந்தியாவின் அடுத்த பிரதமர் யார்? இக் கேள்வி இந்திய அரசியல் வட்டாரங்களில் அடிபடத் தொடங்கியிருக்கிறது. அடுத்த பிரதமராக யார் வருவார் என்பதில் அமெரிக்க பத்திரிகை நிருபர்களும் அக்கறை செலுத்தத்தொடங்கியுள்ளனர். திருமதி இந்திரா காந்தி மீண்டும் பிரதமராக வருவதற்கு வாய்ப்பு அதிகமில்லையென்றும் இப்போதைய உள்நாட்டு மந்திரி வை. பி. சவான் அல்லது முன்னுள் நிதிமந்திரி திரு. மொரார்ஜி தேசாய் வரக்கூடிய வாய்ப்பிருக்கிறதென்றும் கருதப்படுகிறது.

நாளை திங்கட்கிழமை காங்கிரஸ் பார்லிமெண்டரிக்கட்சியும் இந்திய காங்கிரஸ் காரியக்கமிட்டியும் கூடுகின்றனர். பார்லிமெண்டரிக்குழுவின் தலைவர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கான திகதி நாளை தீர்மானிக்கப்படவிருக்கிறது.

குழுவின் தலைவர் அதாவது அடுத்த பிரதமர் யார் என்பதைத் தெரிவுசெய்வதற்கான முயற்சி இப்பொழுதே ஆரம்பமாகிவிட்டது.

[6-ம் பக்கம் பார்க்க]

# அண்ணா மந்திரிசபை 4-ந் தேதி பதவியேற்கும்

## நிதி மந்திரியும் அண்ணாதான்; கல்வி-நெடுஞ்செழியன்; கருணாநிதி - உள்விவகாரம்

— நமது நிருபர் கா. யோகநாதன் —

சென்னை, பெப். 26

**தமிழ்நாட்டில் புதிதாக ஏற்படப்போகும் மந்திரி சபையில் திரு. அண்ணாதுரை முதல்மந்திரியாகவும் நிதி மந்திரியாகவும் இருப்பார். இரா. நெடுஞ்செழியன் கல்வி மந்திரியாகவும் கருணாநிதி உள்துறைமந்திரியாகவும் இருப்பார்கள்.**



தி. மு. க. மந்திரி சபையில் யார் யாருக்கு மந்திரிப் பதவி கிடைக்குமென்பது பற்றி தி. மு. க. உயர் வட்டாரங்களிலிருந்து செய்தி கிடைத்துள்ளது.

திரு. சி. என். அண்ணாதுரை முதல் மந்திரியாகவும், நிதிமந்திரியாகவும் இருப்பார். மற்றும் மந்திரிகள் விபரங்கள் மு. கருணாநிதி - உள்துறை மந்திரி, இரா நெடுஞ்செழியன்-கல்வி மந்திரி, மதியழகன் தொழில் மந்திரி, மாதவன் சட்ட மந்திரி, ஏ. பி. ராமன், ஹரிஜன இலாகா, மந்திரி, திருமதி சத்தியவாணிமுத்து- சுகாதார மந்திரி, அ. கோவிந்தசாமி கூட்டுறவு துறை மந்திரி, இளம்வழுதி- அற நிலைய மந்திரி.

காமராஜரை தோற்கடித்த மாணவர் தலைவர் சினிவாசனுக்கும் மந்திரி சபையில் இடம்கிடைக்கும். மற்றும் சாதிக்பாட்சா, வேழவேந்தன், எம். எஸ். சிவசாமி, மைனர் மோசஸ் மதுரைமுத்து ஆகியோரில் சிலருக்கும் மந்திரி சபையில் இடம்கிடைக்கும், சுகாதார மந்திரியாக வரவிருக்கும் திருமதி சத்தியவாணிமுத்துவுக்குப் பதிலாக தாழ்த்தப்பட்ட சமூகத்தை சேர்ந்த பட்டதாரியான பழனியம்மாள் சிலசமயம் மந்திரிசபையில் இடம் பெறுவார்.



யாழ்ப்பாணம், திங்.
''காமராஜர் தோற்றுவிட்டார். இனிச் செய்வதற்கு என்ன இருக்கிறது? என இந்தியத் தேர்தல் முடிவுகள்பற்றி தமிழ்க் காங்கிரஸ்கட்சி செயலாளர் திரு. ஆ. சங்கரப்பிள்ளை தமது அபிப்பிராயத்தை நமதுநிருபரிடம் தெரிவிக்கையில் குறிப்பிட்டார். 'இந்தியாவில் எந்த ஆட்சிதான் ஏற்பட்டாலும் அவைகளை நாம் பொறுத்திருந்து பார்ப்போமே!'' எனவும் அவர் தெரிவித்தார். ந. நி.

## எஸ். பி. ஆதித்தன் சபாநாயகராவார்

திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்துள்ளநாம் தமிழர் கட்சி தலைவர் திரு. எஸ். பி. ஆதித்தனுக்கு சபாநாயகர் பதவியும் மெய்யப்பனுக்கு உதவி சபாநாயகர் பதவியும் அளிக்கப்படுமென்று தெரியவருகிறது.

இன்று சென்னையில் நடைபெறும் தி. மு. க. எம் எல். ஏ. க்களின் கூட்டத்தில் மந்திரிசபைபற்றி இறுதி முடிவு எடுக்கப்படும்.

மார்ச்மாதம் 4ந் தேதிக்கு முன் திரு. அண்ணாதுரை முதன் மந்திரியாகப் பதவியேற்று மந்திரிசபைஅமைப்பார். ஏனெனில் மார்ச் 15ம் தேதி புதிய சட்டசபை கூட வேண்டும். மார்ச் 30ந் தேதிக்குப்பிந்திய அரசாங்க முடிவுகளுக்கு புதிய மந்திரி சபையே அங்கிகாரம் அளிக்க வேண்டும். சட்டசபைக்கூட்டத்தை 10 நாள் முனனறிவித்தல் கொடுத்து தொடங்க வேண்டும். அரசாங்கத்தின் வருடாந்த கணக்கையும் புதிய சட்டசபைக் கூட்டத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.

## 'மந்திரிப்பதவி வேண்டாம்' என எம். ஜி. ஆர். அறிவிப்பு

சென்னை பெரியாஸ்பத்திரியில் நேற்று திரு. அண்ணாதுரையும், இரா. நெடுஞ்செழியனும், நடிகர் எம். ஜி. ராமச்சந்திரனுடன், மந்திரி சபைபற்றிப் பேசியதாகவும் ராமச்சந்திரன் தனக்கு மந்திரிப்பதவி வேண்டாமென்று கூறிவிட்டதாகவும் கலையுலகு மூலமேதொண்டாற்ற ராமச்சந்திரன்விரும்பியதாகவும் தெரியவருகிறது. தி. மு. கழகம் எடுக்கும் எந்த முடிவையும் தான்முழுமனதுடன் ஏற்றுக்கொள்வதாக ராமச்சந்திரன் அண்ணாதுரையிடம் தெரிவித்தார்.

## ம. பொ. சி. மந்திரியாகார்; அண்ணா டில்லி செல்வார்

திரு. அண்ணாதுரைமந்திரி சபை அமைத்தபின் டில்லிக்குச் சென்று எதிர்க்கட்சித் தலைவர்களைச் சந்தித்துப் பேசவிருக்கிறாரென்றும் டில்லியில் காங்கிரஸ் தலைவர்கள்சிலரைச் சந்தித்துப்பேசக்கூடுமென்றும் தெரிகிறது.

திராவிடமுன்னேற்றக்கழகத்தின்சின்னத்தைத்தாங்கி தி. மு. க. அபேட்சகராகப் போட்டியிட்டு திரு. ம. பொ. சிவஞானம் வெற்றியீட்டியபோதிலும் அவர் தமது தமிழரசுக்கழகத்தை கலைத்துவிட்டு தி. மு. கழகத்தில் சேரமாட்டார். இதனால் அவருக்கு மந்திரிப்பதவி கிடைக்கும் வாய்ப்பு இல்லையென்று தி. மு. க. உயர்தர வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்தன. திரு. ம. பொ. வாக்குவன்மை படைத்த சிறந்த பேச்சாளராகையால் அவரை சபாநாயகராக்கி, அவர்பேசுவதற்கு சந்தர்ப்பமில்லால் செய்து விடவும் தி. மு. கழகம் விரும்பவில்லையாம்.

## 'ஜனநாயக நாடு என்பது நிரூபிக்கப்பட்டது' தேர்தல் பற்றி தலைமைகமிஷனர்

புதுடில்லி, பெப். 26
பாரதத்தில் தேர்தல் ஜனநாயக முறைப்படி நடைபெற்றதாகவும்பாரதம் ஜனநாயக நாடு என்பது இத்தேர்தலின்போது நிரூபிக்கப்பட்டுவிட்டதாகவும்தேர்தல் தலைமைக் கமிஷனர் திரு. கே. வி. கே. சுந்தரம் தெரிவித்துள்ளார்.

இப்போது பாரதத்தில் நடைபெற்று முடிந்த தேர்தலைப்பற்றி வெளியார் என்னசொன்னாலும் மேலும் பல தேர்தல்கள் பாரதத்தில் நடக்கத்தான் போகிறது என்பதுபற்றித் தாம் உறுதிகூறுவதாக அவர் எடுத்துக்கூறினார்.

## 'தி.மு.க. வெற்றியினால் சிங்களவருக்கு ஆபத்து' — சிறிமா



கொலன்னுவ, சனி
''தென்இந்தியத் தேர்தல்களில்திராவிட முன்னேற்றக் கழகம் ஈட்டியுள்ள வெற்றி, இலங்கையிலுள்ள சிங்களவரின்நிலையை மேலும்மோசமாக்கும். ஏனெனில், இங்குள்ள தமிழரசுக் கட்சி தி. மு. க. வின் அங்கமேயாகும்.''

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர்திருமதி சிறிமாபண்டாரநாயக்கா, நேற்றுகொலன்னுவ உம்காலிய பூங்காவில் சுதந்திரக்கட்சி அபேட்சகர் திரு. ரி. பி. இலங்கரத்தினவை ஆதரித்து நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலுமுள்ள தமிழரசு வாதிகள், தி. மு. க. வின் வெற்றியையிட்டுப் பெருமகிழ்ச்சியுடன் கொண்டாடியதாகவும் அவர் கூறினார்.

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

இறைவனின் மகத்துவத்தை நாம் சதா நினைக்கும் போதுதான் நமக்குப் பணிவு ஏற்படும். அவரது வல்லமையுடன் ஒப்பிடும்போது நாம் வெறும் பூஜ்யமாகிவிடுகிறோம்.

— சுவாமிராமதாஸ்

ஈழநாடு

Eelan du National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna,
Telephone: 389.

யாழ்ப்பாணம் பராபவ ஞூ மாசி மீ 15 (27-2-67)

## இந்தியத் தேர்தலும் அதன் பிறகும்

உலகிலேயே பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில் பொதுத் தேர்தல் முடிந்து பொதுமக்களின் தீர்ப்பும் அநேகமாக வெளியாகிவிட்டன. லோகசபைக்கான தேர்தலிலும், சில ராஜ்யங்களிலும் காங்கிரஸ் கட்சிக்கு மந்திரிசபை அமைக்கக்கூடிய அளவு பலம் கிடைத்திருப்பது உண்மையே. என்றாலும் முன்னிருந்த நிலைமையுடன் ஒப்பிடுகையில் மத்திய அரசாங்கத்திலும், பொதுவாக ராஜ்யங்களிலும் காங்கிரஸ் கட்சி நடத்திய ஆட்சியைக் கண்டித்தே மக்கள் தீர்ப்பு உள்ளதென்பதில் சந்தேகமில்லை.

மத்தியிலுள்ள லோகசபையிலே சில ஸ்தானங்கள் மெஜாரிட்டி பலமே காங்கிரஸ் கட்சிக்குக் கிடைத்துள்ளது. ஏற்கெனவே 238 ஆக இருந்த மெஜாரிட்டி இத்தேர்தலுக்குப்பின் பெரிதும் குறைந்துவிட்டது. இந்நிலையில் காங்கிரஸ்கட்சி, மத்திய ஆட்சிப் பொறுப்பை ஏற்று, தனியாக நடத்த முன்வருமாயின் அந்த ஆட்சியின் எதிர்காலம் நித்யகண்டமாக இருக்கும். சிறப்பாக சென்னை, கேரளம், ஒரிஸா, டில்லி முதலிய இடங்களிலே காங்கிரஸுக்குப் பதிலாக வேறு கட்சிகளின் ஆட்சியே இனி நடக்குமாதலால், பலபல புதிய சங்கடங்கள் கிளம்பக்கூடும். இவற்றையெல்லாம் சமாளித்து ஜனநாயக ஆட்சியை அமைதியாகக் கொண்டு செல்வது மத்தியிலுள்ள காங்கிரஸ் ஆட்சிக்கு நிச்சயம் சுலபமன்று. இப்போது புதுடில்லியில் கூடும் காங்கிரஸ் பார்லிமெண்ட் கட்சியினர் என்ன முடிவு செய்யப் போகிறார்கள்? மத்தியிலும், தங்களுக்கு ஓரளவு மெஜாரிட்டிபலம் கிடைத்துள்ள ராஜ்யங்களிலும் கட்சிமுறையில்மந்திரிசபை அமைத்து ஆட்சிப் பொறுப்பை ஏற்கப் போகிறார்களா அல்லது மற்றக் கட்சிகளின் ஒத்துழைப்பையும் பெற்று, தேசிய அல்லது கூட்டு மந்திரிசபைகளை அமைக்கப் போகிறார்களா? இந்த முக்கியமான கேள்விக்கான பதில்தான், இந்தியாவின் எதிர்கால அரசியலும், அமைதியும் முன்னேற்றமும் ஜனநாயகத்தின் தலையெழுத்தும்கூட தங்கியுள்ளது.

நேற்று நாம் குறிப்பிட்டதுபோல், இத்தேர்தலில் இந்தியப் பொதுமக்கள் அளித்துள்ள தீர்ப்பு, நாட்டில் ஒரு கட்சி மட்டுமன்றி, பல கட்சிகளும் சேர்ந்த தேசிய மந்திரிசபை அமைக்கவேண்டுமென்பதுதான். இந்தியாவுக்கு உள்ளேயும் வெளியேயும் பெரிய நெருக்கடிகள்ஏற்பட்டுள்ளன. சீனத் தாக்குதல்அல்லது பாகிஸ்தான் மோதல் ஏற்பட்டபோதே அங்கு பல கட்சிகளும் அடங்கிய தேசிய அரசாங்கம் அமைத்திருக்கவேண்டும். அப்போதே அப்படிச் செய்திருந்தால் இன்று காங்கிரஸின் நிலைமைஇவ்வளவு மோசமாகியிராது. இது எப்படியாயினும் இப்போதாவது காங்கிரஸ் தலைவர்கள் நன்கு சிந்தனைசெய்து, மற்றக்கட்சித்தலைவர்களையும் அழைத்து, நாட்டின் முக்கிய பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான பொது வேலைத்திட்டம் தயாரித்து, அதை அடிப்படையாகக்கொண்டு, பலகட்சிகளும் அடங்கிய தேசிய அரசாங்கத்தை அல்லது கூட்டு அரசாங்கத்தை அமைப்பதுதான் காங்கிரஸுக்கு மட்டுமன்றி, நாட்டு மக்களுக்கும் ஜனநாயகத்துக்கும் நன்மையாகும். அதற்கானதியாக புத்தியும் அரசியல் தீர்க்க தரிசனமும் டில்லியில் கூடும் காங்கிரஸ் தலைவர்களுக்கு இருக்குமா? இம்மகத்தான தேர்தலைநடத்தியது பெரிய காரியம் தான். ஆனால் இத்தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்பின் உண்மைக் கருத்தை சரியாக உணர்ந்து, அதன்படி விவேகத்துடன் காரியம்செய்வது [illegible] முக்கியமாகும்.

# எல்லாம் தமிழில் செய்தால் தமிழர்க்கு வேலை கிடைக்கும்'

### அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் தமிழியக்க சுவரொட்டி

கொழும்பு, ஞாயிறு

'எல்லாம் தமிழ்' தருவது தமிழ்பேசும் அரசாங்கஊழியர்களுக்கு தொழில்பிச்சை'

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் சுவரொட்டி விளம்பரம் ஒன்றில்தான் மேற்கண்டவாசகங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. "தமிழ்ப்பேசும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு, வருங்காலத் தமிழ் சந்ததிக்கு வேலைவாய்ப்பு உறுதிப்பாடுஇவைகளுக்கெல்லாம் எல்லாம்தமிழில்செய்யுங்கள்'' என்றும் அந்தச் சுவரொட்டியிலுள்ள வாசகங்கள் தெரிவிக்கின்றன.

தமிழ்மொழிச்சட்ட விதிகளை அரசாங்க இலாக்களில் அமுல் படுத்துவதில் அரசாங்க எழுதுவினைஞர்சங்கம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இந்த விதிகளை வடக்குகிழக்கில் முழுமையுடன் இயங்க வைக்க 'எல்லாம் தமிழியக்கம்' என்ற சங்கத்தையும் உருவாக்கியுள்ளது.

அலுவலகங்களுக்குச் சென்ற தமது உறுப்பினரை தமிழில் வேலை செய்யத் தூண்டுவது, மேலதிகாரிகளின் ஒத்துழைப்பைக்கோருவது, பொதுமக்களின்விழிப்பைத் தூண்டுவது இந்த இயக்கத்தின் முதற்கட்டமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான துண்டுப் பிரசுரங்களும், சுவரொட்டிகளும் இப்போது ஒவ்வொரு கிளைக்கும் அனுப்பிவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

'தமிழ் பேசும் பெருமக்களே! எல்லாம் தமிழில் செய்தே— தமிழ் பேசும் அரசாங்க ஊழியருக்கு வாழ்வளியுங்கள்! தமிழை வாழவிடுங்கள்! ஆங்கிலத்தில் எழுதினுல் சிங்களத்தில் தான் பதில் வரும். தமிழில் எழுதினுல் தமிழில் பதில்'

என்பன போன்ற பல சுவரொட்டிகள் பல பகுதிகளுக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றனவாம்.

எல்லாம் தமிழியக்கத்தைப் பலப்படுத்த அடுத்த கட்டமாக ஒவ்வொரு பகுதியிலும் பொதுக்கூட்டங்கள் நடாத்துவதென்றும், அப்பொதுக்கூட்டத்துக்கு அப்பகுதி எம். பி.க்களையும், அப்பகுதி சகோதர மொழி வழித் தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும் அழைக்கவேண்டுமென்றும் தெரிவித்துள்ளது.

அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் 'எல்லாம் தமிழ்ல்! ஏன்? என்று தலைப்பிட்டு வெளியிட்டுள்ள ஒரு விளக்கத் துண்டுப்பிரசுரத்தில் தெரிவித்திருப்பதாவது:-

'உங்கள் பிள்ளைகளுக்குத் தொழில் வசதி அளிப்பதற்கு எல்லாம் தமிழில் செய்யுங்கள். தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களுக்குத் தொழில் வசதி அளியுங்கள். அவர்கள் வாழ்வைக் காப்பாற்றுங்கள். திறமான சிங்களப் புலமையுள்ள லட்சக்கணக்கான சிங்கள இளைஞர்கள் கூலி வேலைக்குப் போட்டியிடும்போது நமது பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் அரைகுறைச் சிங்கள அறிவுடன் வேலை பெற்று வாழ முடியுமென்பது வெறும் பகற்கனவு. நாமும் நமது இன்றைய இளைஞரும், வருங்காலச சந்ததியினரும் அரசாங்கவேலை வாய்ப்புகள் பெற நீங்கள் தமிழிலேயே தொடர்பு கொள்ளுங்கள். தமிழ் மொழி மூலம் சேவையாற்றக்கூடிய சூழ்நிலையை உருவாக்குங்கள்.

# வருமானவரி இலாகாவுக்கு கணக்குகாட்டாதரூ.30லட்சம்

### யாழ்ப்பாணத்தில் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்திலுள்ள நான்கு கடைகளிலிருந்தும் இரண்டு வீடுகளிலிருந்தும் வருமானவரி இலாகாவினருக்குக் கணக்குக் காட்டாத சுமார் 30 லட்சம் ரூபாபணத்தை வருமான வரிஇலாகா சோதனைக் குழுவினரும், யாழ்ப்பாணம் பொலிஸாரும் கண்டு பிடித்துள்ளனர்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த வருமானவரி இலாகா பரிசோதனைக் குழுவினர் நடாத்தியதிடீர்வேட்டையின் போதே இந்த 30 லட்சம் ரூபாவும்கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தஒருவருக்குச் சொந்தமாக கொழும்பில் இருக்கும் கடைக்கும் 'சீல்' வைத்துவிட்டு அவரது யாழ்ப்பாணத்திலுள்ள கடையையும் சோதனையிட்ட போதேஇங்கிருந்துவருமானவரி இலாகாவினருக்குக் கணக்குக் காட்டாத சுமார் 5 லட்சம் ரூபா பெறுமதியான பணத்தையும், பல்லாயிரக் கணக்கான ரூபா பணத்தையும் இவ்வருமான வரி இலாகா சோதனைக்குழுவினர் கண்டு பிடித்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட நான்கு கடைகளையும் 2வீடுகளையும் சோதனையிட்ட பின்னர் அங்கு கண்டு பிடிக்கப்பட்ட பணம், பொருள் ஆகியன பற்றிய தஸ்தாவேஜுகளுடன் சோதனைக் குழுவினர் நேற்று முன்தினம்கொழும்பு திரும்பியுள்ளனர். இவர்கள் மீது சட்ட பூர்வமான நடவடிக்கை எடுப்பது பற்றிதாம் கொழும்பு சென்றதும் ஆராய்வதாக மேற்படி குழுவிலுள்ள முக்கிய உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார். [ந. நி]

## திருக்கேதீச்சர விசேஷபஸ்சேவை

திருக்கேதீச்சரம், ஞாயிறு

இங்கு ஆலயத்திற்குவரும் அடியார்களுக்கு இம்முறையும் புகையிரதஇணைப்பு பஸ் சேவைகள் வவனியா, திருக்கேதீச்சரம், மன்னார் ஆகிய புகையிரத நிலையங்களிலிருந்து ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் போன்ற தூர இடங்களிலிருந்து விசேஷ பஸ் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

## செம்பியன்பற்று கி. ச. தேர்தல்

### நியமனப்பத்திரம தாக்கலாகியது

தாளையடி, ஞாயிறு

செம்பியன்பற்று கிராம சபைத் தேர்தலுக்கான மனுக்கள் தேர்தல் அதிகாரி முன் தாக்கல் செய்யப்பட்டன,

போட்டியிடும் அபேட்சகர்களும் அவர்களின் வட்டார விபரமும் வருமாறு -

1-ம் வட்டாரம் செ. நடராசா, செ. ஐயாத்துரை.

2-ம் வட்டாரம்: திரு. க. கிருஷ்ணபிள்ளை, திரு. பி. ஞானப்பிரகாசம்.

3-ம் வட்டாரம்: திரு. வ. சுப்பிரமணியம், திரு. சி. முத்தையா, திரு. வே. நடராசா

4-ம் வட்டாரம்: திரு. வ. ஜெயராசா, திரு. வ. சூசைப்பிள்ளை.

5-ம் வட்டாரம்: வே. சின்னத்துரை, வ. சின்னையா, வே. செல்லத்துரை.

6-ம் வட்டாரம்: ஆ. கணபதிப்பிள்ளை, திரு. ந. குமாரசாமி, வே. சின்னத்தம்பி,

7-ம் வட்டாரம்: வே. சதாசிவம் [போட்டியின்றித் தெரிவு]

8ம்வட்டாரம், ஐ. ஆ, ஐயம்பிள்ளை, செ. வேலுப்பிள்ளை, சி. நல்லையா. 9-ம்வட்டாரம் சி. குலசேகரம், சி. நற்குணம் சு. சண்முகம்.

[5-ம் கலத்தொடர்ச்சி]

டதுமே- அவரது மலர்ந்த முகத்தைக்கண்டதுமே எம். ஜி. ஆர். எழுந்து ஓடிவந்து கருணாநிதியைக் கட்டித் தழுவிக்கொண்டார். எவருமே மகிழ்ச்சிப்பெருக்கினுல் சில நிமிஷங்கள்வரை பேசிக் கொள்ள முடியாமற்போய் விட்டதாம். எஸ். எஸ். ஆரும், எம். ஜி. ஆரும் ஒருவரை ஒருவர் கட்டித் தழுவிக்கொண்டனராம்.

நடிகர் சிவாஜி கணேசன் கூட காங்கிரஸுக்காகப் பிரசாரம்செய்யத் தொடங்குமுன் அண்ணாவிடம் தனது நிலையைக் கூறி, அவரது அனுமதியுடன்தான் சென்றாராம். பறங்கிமலைக்கும், சென்னைநகருக்கும் பிரசாரம்செய்யப் போகமாட்டேன் என்று சிவாஜி, அண்ணாவிடம் தெரிவித்திருந்தாராம்.

—ஊர்சுற்றி

## நாடும் நடப்பும்

தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக்கழகம் ஆட்சிபீடத்துக்கு வந்திருக்கின்றது. இந்தியத் தேர்தல் பற்றி உலகம் முழுவதிலும் அக்கறை காட்டப்பட்டுவந்தது. இலங்கையிலுள்ள மக்களும் அக்கறை காட்டினர். தமிழ்நாட்டின் தேர்தலில்தான் அவர்கள் ஆர்வமும் அக்கறையும் அதிகம். இது இயல்பே. சிங்களப் பொதுமக்கள்கூடத் தமிழ் நாட்டுத் தேர்தலில் அக்கறை காட்டினர். அவர்கள் அரசியலைப் பற்றிக் கவலைப்படவில்லை. அவர்களின் அபிமான நடிகர் எம். ஜி. ஆ.ரின் வெற்றியில்தான் அவர்களின் அக்கறை இருந்தது.

சிங்களப் பொதுமக்களின் கவனத்தை இப்பொழுது திருமதி சிறிமா வேறு திசையில் திருப்ப முன்வந்திருக்கிறார். தமிழ்நாட்டில் தி. மு. க. ஆட்சிக்கு வந்திருப்பதால் இனி சிங்கள மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டுமென்றும் சிங்கள மக்கள் தங்கள் தாய்நாட்டைக் காப்பாற்ற முன்வரவேண்டுமென்றும் அவர் கொலன்னாவை உப-தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் பேசுகையில் அபாயக்குரல் கொடுத்திருக்கிறார். அது தேர்தல் 'பிரசாரப் பேச்சுத்தான்'. என்றாலும் தி. மு. கழகத்துடன் தமிழரசுக்கட்சியையும் முடிச்சுப்போட்டு. துவேஷப் பேச்சுப் பேசியிருப்பது பிரதமராகப் பொறுப்பு வாய்ந்த பதவிவகித்த ஒரு பெண்மணியின் வாயிலிருந்து எதிர்பார்க்கக்கூடியதல்ல!

ஃ ஃ ஃ

அண்ணாதுரை முதன் மந்திரியாகப் போகிறார் என்ற செய்தியை திராவிடக் கழகத் தலைவர் ஈ. வெ. ரா. பெரியாரிடம் சொன்னபோதுஇதெல்லாம் ராஜாஜியின் வேலைதான்' என்றும் 'நாடே இவங்களையில் சிக்கி நாசமாகப்போகிறது' என்றும் அவர்கூறினாராம். என்றாலும் தம்மிடம் 40 ரூபாய் சம்பளத்துக்கு வேலைசெய்து ஒரு காலத்தில் தமது 'தளபதி'யாக இருந்த அண்ணாதுரை நாட்டின் முதன் மந்திரியாவதைக் கண்டு உள்ளத்துள் மகிழ்ந்திருப்பார்.

அண்ணாவிடம் பெரியார் பற்றிக் கேட்டபோது, பெரியார் தொடர்ந்து வகுப்புத் துவேஷத்தை வளர்த்துவருவதாகவும், பெரியாருக்கும் தனக்கும் கொள்கை வேறுபாடு இருப்பதால் ஒன்று சேரும் வாய்ப்பு இல்லை என்றும் கூறினாராம். இதைக் கேட்ட பெரியார் என்ன சொல்லியிருப்பார்? 'வெங்காயம்' என்று கூறியிருப்பார்.

ஃ ஃ ஃ

எம். ஜி. ஆருக்கும் நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரனுக்குமிடையில் சிறிதுமனக்கசப்பு இருந்தது. கருணாநிதியும் ராஜேந்திரன் பக்கம் சார்ந்திருந்தாராம். எம். ஜி. ஆர்., ராஜேந்திரன் அறிக்கைகளும் பதில்களும் பத்திரிகைகளில் வெளிவந்துகொண்டிருந்தன. இப்பொழுது மனக்கசப்பு நீங்கிவிட்டது.

பறங்கிமலைத் தொகுதி முடிவு அறிவிக்கப்பட்ட தினம் இரவு மு. கருணாநிதி, ம. பொ. சிவஞானக்கிராமணியார், எஸ். எஸ். ராஜேந்திரன் மற்றும் சிலரும் ஆஸ்பத்திரிக்கு எம். ஜி. ராமச்சந்திரனைப் பாராட்டச்சென்றிருந்தனர். கருணாநிதியை தூரத்தில் கண்

[4-ம் கலம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டில்லியில் மத்திய அரசாங்கத்தை காங்கிரஸ் அமைக்கும்

## பீஹாரில் ராஷ்டிரபதி ஆட்சி பிரகடனப்படுத்தப்படலாம்

புதுடில்லி, பெப்.27

**மத்தியஅரசாங்கத்தை டில்லியில் மீண்டும் அமைக்கும்வாய்ப்பு அகிலஇந்தியகாங்கிரஸ்கட்சிக்குக் கிடைத்திருக்கிறது.**

இன்று நண்பகல்வரை அறிவிக்கப்பட்ட லோகசபை (பார்லிமெண்ட்) தேர்தல்முடிவுகளின்படி, அகில இந்தியகாங்கிரஸ்கட்சி அறுதிப் பெரும்பான்மைப்பலம் பெற்றுவிட்டது.(இன்று நண்பகல்வரை வெளியான முடிவுகளில்) காங்கிரஸ் கட்சி 261 லோகசபை ஸ்தானங்களைப் பெற்றிருந்தது.

521 ஸ்தானங்களைக் கொண்ட இந்திய லோகசபைக்கு516 தொகுதிகளில் தேர்தல் நடைபெற்றது. மிகுதியான ஐந்து ஸ்தானங்களுக்கு கோவா, டமன், டியூ ஆகிய இடங்களிலிருந்து நான்குபேரும் நேபாவிலிருந்து ஒருவரும்பின்னர்தேர்ந்தெடுக்கப்படுவார்கள். நேபாவிலிருந்து ஒருவர் லோகசபைக்கு நியமிக்கப்படுவார்.

## தி.மு.கழகத்தின் பெரும் வெற்றி

லோகசபை தேர்தலைப் பொறுத்தவரை திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு ஒருபெரியவெற்றி கிடைத்திருக்கிறது. தமிழ்நாட்டிலிருந்து லோகசபைக்கு 25 ஸ்தானங்களுக்கு தி.மு.க. போட்டியிட்டு 25 ஸ்தானங்களிலும் வெற்றிபெற்றுள்ளது. லோக்சபைக்குப் போட்டியிட்ட சகல தொகுதிகளிலும் வெற்றி பெற்ற பெருமை தி. மு. கழகத்தை மட்டுமே சாரும் என்பது குறிப்பிடத்தக்கது.

## காங்கிரஸ் ஆட்சி அமைக்கும்

லோகசபையின் மொத்த ஸ்தானங்களில்[521] காங்கிரஸ்அரைவாசித்தொகைக்கு மேலான ஸ்தானங்களைக் கைப்பற்றிவிட்டதால், காங்கிரஸ் கட்சியே டில்லியில் மீண்டும் ஆட்சி அமைக்கத் தகுதிபெற்றுள்ளது.

இன்னும் 44 லோகசபை ஸ்தானங்களின் முடிவுகள் அறிவிக்கப்படவேண்டும். இதில் மேலும் சில ஸ்தானங்களை காங்கிரஸ் கைப்பற்றிக் கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1962-ல் நடைபெற்ற கடைசித் தேர்தலில் காங்கிரஸ் 400-க்கும் அதிகமான லோகசபை ஸ்தானங்களைக் கைப்பற்றியிருந்தது.

## பீகார் நிலைமை

பீஹார் ராஜ்ய சட்டசபைத் தேர்தலில் எந்தக் கட்சியும் அறுதிப்பெரும்பான்மைப்பலம்பெறவில்லை. காங்கிரஸும் இதே நிலைமையில் தான் உள்ளது.எக்கட்சியும் கூட்டுச்சேர்ந்து இங்கு அரசாங்கமொன்றைஅமைக்காத பட்சத்தில் பீஹாரில் நேரடி ராஷ்டிரபதி ஆட்சி பிரகடனப்படுத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

## பெரும்பான்மை இல்லை

காங்கிரஸ்கட்சி ஏழு ராஜ்யங்களில் அறுதிப்பெரும்பான்மைப்பலம் பெற்றிருக்கிறது. மேற்குவங்காளம், ராஜஸ்தான், பஞ்சாப், பீஹார், உத்தரப்பிரதேசம் ஆகிய ஐந்து ராஜ்யங்களில் காங்கிரஸ்பெரும்பான்மைப் பலம் பெறவில்லை. இதே மாதிரிமற்றையஎந்தத்தனிக் கட்சிக்கும் இந்த ராஜ்யங்களில் பெரும்பான்மைவெற்றி கிடைக்கவில்லை.

## 13,169 வாக்குகளால் கிருஷ்ணமேனன் தோல்வி

பம்பாயின் வடகிழக்குத் தொகுதியில் சுயேச்சையாகப் போட்டியிட்ட திரு. வி. கே. கிருஷ்ணமேனன் 13 ஆயிரத்து 169 வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டுள்ளார்.

இவருடன் போட்டியிட்டு வெற்றிபெற்றுள்ள காங்கிரஸ் அபேட்சகர் திரு. பர்வேக்கு ஒரு லட்சத்து 71 ஆயிரத்து 902 வாக்குகள் கிடைத்திருந்தன. திரு. வி. கே. கிருஷ்ணமேனனுக்கு ஒரு லட்சத்து 58 ஆயிரத்து 733வாக்குகள் கிடைத்திருந்தன. இத்தொகுதியில் போட்டியிட்ட 5 சுயேச்சையாளர்கள் கட்டுப்பணத்தை இழந்திருக்கின்றனர். ஜனசங் அபேட்சகர் 79 ஆயிரம் வாக்குகள் பெற்றிருந்தார்.

வட பம்பாய்த் தொகுதியில் திரு. வி. கே. கிருஷ்ணமேனன் 1957லிருந்து லோகசபை அங்கத்தவராக இருந்துவந்தார். இத்தொகுதி இத்தேர்தலில் இரண்டு பிரிவுகளானது.

---

## நல்லூர் கி. ச. தேர்தல்

யாழ்ப்பாணம், திங்கள்

நல்லூர்க் கிராமசபையின் புதிய தேர்தலுக்கான [illegible] கிராமசபை அலுவலில் [illegible] னப்பத்திரங்கள் [illegible] செய்யப்பப் காலை 10 மணிமுதல் மேற் படும். [ந.நி.]

## மற்றைய கட்சிகள்

இன்றுகாலைவரை வெளியான முடிவுகளின்படி, லோகசபையில் காங்கிரஸ் 261 ஸ்தானங்களிலும், சுதந்திரா 43 ஸ்தானங்களிலும், ஜனசங் 24 ஸ்தானங்களிலும் வெற்றிபெற்றுள்ளன. சம்யுக்த சோஷலிஸ்ட்கட்சி: 23, பிரஜா சோஷலிஸ்ட் 07, கம்யூனிஸ்ட் 20, மார்க்ஸிய கம்யூனிஸ்ட் 19, குடியரசு 01, இதரகட்சிகள் 11, சுயேச்சை 33.

---

## 60.000 மைல் சுற்றுலா

லண்டன் பெப்6

''மினி கூப்பர் எஸ்,, எனப்படும் பிரிட்டனில் நவீன ரகமான சிறியகார் உலக சுற்றுப்பிரயாணம் ஒன்றை மேற்கொண்டு வேகத்திலும் பாவனையிலும் ஒரு புதிய சாதனையை நிலைநாட்டவிருக்கிறது. இந்தச்சுற்றுலா வில் இக்கார் 60,000 மைல் களை 51 நாடுகளூடாக கடந்து செல்லும். இந்த சாதனையை செய்து முடிக்க 55வாரகாலம் பிடிக்குமென மதிப்பிடப்படுகிறது.

எரிக்வில்சன் [22 வயது] மார்டின் பிலோலி [23 வயது]எனப்படும் இரு பிரிட்டிஷ் இளைஞர்கள் இந்தக் காரைஓட்டிச் செல்வார்கள்

---

## அமைச்சரைச் சந்தித்தனர்

அராலி, சனி

வட்டுக்கோட்டை கிராமசபை தேர்தல் ஓராண்டு காலம் பின்போடவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறதென்றும், இதற்கான சுற்றுநிருபம்விரைவில்வெளியாகுமென்றும் உள்ளூராட்சி அமைச்சர்செனட்டர் திருச்செல்வம்தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள தமிழரசுக்கட்சிக் ககரியாலயத்தில் அராலி வாசிகள் சார்பில் தம்மைச் சந்தித்த கோஷ்டியிடம் தெரிவித்தார்.

அராலி வாசிகள் உந்தேசித்த தேர்தல் பகிஷ்கரிப்பைகைவிட வேண்டுமென்றும், நியமனப்பத்திரங்களை வேட்பாளர்கள் குறித்த காலத்தில் சமர்ப்பிக்கும் மாறுமந்திரிகேட்டுக்கொண்டார்.

## ஜம்மு-காஷ்மீரில் சாதிக் வெற்றி

ஜம்மு-காஷ்மீர், சட்டசபைத் தேர்தல் முடிவுகள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

இதுவரை வெளியான 30 முடிவுகளில் காங்கிரஸ் அபேட்சகர்கள் வெற்றி பெற்றுள்ளனர். ஜனசங் அபேட்சகர் ஒருவரும், சுயேச்சையாளர் ஒருவரும் வெற்றியீட்டியுள்ளனர்.

ஸ்ரீநகர் தொகுதியில் தேசியமகாநாட்டு அபேட்சகர் திரு. குலாம் முகம்மது ஷபீரை ஜம்மு-காஷ்மீர் முதன்மந்திரி திரு. குலாம் முகம்மதுசாதிக் தோற்கடித்துள்ளார்.

## கட்சிகள் நிலைமை

இந்தியத் தேர்தல்களில் போட்டியிட்ட பல கட்சிகளிலும் காங்கிரஸுக்கே பெரும் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. ராஜ்யத் தேர்தல்களில் மட்டுமின்றி லோகசபையிலும் காங்கிரஸுக்குப் பெரும் தோல்வி ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாடு, கேரளம், ஓரிஸா ஆகிய 3 ராஜ்யங்களிலும் காங்கிரஸுக்கு பெரிய தோல்வி ஏற்பட்டது. இது தவிர 8 ராஜ்யங்களில் காங்கிரஸ் அறுதிப் பெரும்பான்மைப் பலம்பெறத் தவறிவிட்டது.

ஜனசங் கட்சியைப் பொறுத்தவரையில் டில்லி மெட்ருபொலிடன் சபையில் அது பெரும்பான்மைப் பலம் பெற்றுள்ளது. ஆந்திரப்பிரதேசத்தில் சுமார் 80 சட்டசபை ஸ்தானங்களுக்குப் போட்டியிட்டு மிகவும் குறைந்த ஸ்தானங்களையே கைப்பற்றியுள்ளது. லோகசபையில் 34 ஸ்தானங்களில் இக்கட்சி வெற்றிபெற்றுள்ளது.

கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தமட்டில் கேரளத்தில் பெரும் வெற்றிகிடைத்திருக்கிறது. மேற்கு வங்காளத்திலும் இக்கட்சிக்கு அதிக ஸ்தானங்கள் இம்முறை கிடைத்திருக்கிறது. மேற்கு வங்காளத்தில் காங்கிரஸ் அல்லாத அரசாங்கம் ஒன்றை அமைப்பதில் இக்கட்சி முயற்சித்து வருவதாகச் சொல்லப்படுகிறது. பீஹார் உத்தரப் பிரதேசத்திலும் கம்யூனிஸ்டுகளுக்கு வெற்றி கிடைத்திருக்கிறது. பஞ்சாபில் 8 தொகுதிகளை மட்டுமே கம்யூனிஸ்ட் கட்சி கைப்பற்றியுள்ளது.

சம்யுக்த சோஷலிஸ்ட்கட்சியைப் பொறுத்தவரை பீஹாரில் அதற்கு ஓரளவு வெற்றி கிடைத்திருக்கிறது. உத்தரப் பிரதேசத்தில் இரண்டாவது இடத்தை இக்கட்சி கொண்டுள்ளது, கேரளத்தில் 19 ஸ்தானங்களிலும் மத்தியப்பிரதேசத்தில் 10 ஸ்தானங்களிலும் ராஜஸ்தானில் 8 இடங்களிலும் இக்கட்சி வெற்றிபெற்றுள்ளது. குஜராத், ஹரியானவில் இக்கட்சிக்குத் தோல்வி ஏற்பட்டுள்ளது.

பிரஜா சோஷலிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரை மைசூரில் நல்ல வெற்றி கிடைத்திருக்கிறது. இங்கு பிரதான எதிர்க்கட்சியாக இது உள்ளது. கேரளத்தில் இக்கட்சி பல தொகுதிகளில் போட்டியிட்ட போதிலும் எந்த ஸ்தானமும் இதற்குக் கிடைக்கவில்லை.

சுதந்திராவைப் பொறுத்தவரை லோகசபையில் இம்முறை அதிக ஸ்தானங்களைக் கைப்பற்றியுள்ளது. ஒரிஸாவில் சுதந்திரா பெரும்பான்மையான ஸ்தானங்களைக் கைப்பற்றியுள்ளது. குஜராத்தில் சுதந்திரா இரண்டாவது பெரிய கட்சியாக விளங்குகிறது. வேறு சில ராஜ்யங்களிலும் சுதந்திரா இத்தேர்தலில் கூடுதலான ஸ்தானங்களைக் கைப்பற்றியுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகம் இத்தேர்தலில் பெரும் வெற்றியீட்டியுள்ளது. தமிழ்நாட்டில் ஆட்சியை அமைத்தது மட்டுமின்றி லோகசபைக்குப் போட்டியிட்ட எல்லா ஸ்தானங்களிலும் அது வெற்றி பெற்றுள்ளது.

## பெண்கள் குறைவு

ராஜ்ய சட்டசபைத் தேர்தல்களில் போட்டியிட்ட பெண்களில் மிகவும் குறைவானவர்களே இம்முறை வெற்றிபெற்றுள்ளனர்.

மைசூரில் ராஜ்ய சட்டசபைக்குப் போட்டியிட்ட பெண்களில் 9பேர் மட்டுமே வெற்றிபெற்றுள்ளனர். கடந்த தேர்தலில் 17 பெண்கள் வெற்றிபெற்றனர். பஞ்சாபில் இரண்டு பெண்களும் குஜராத்தில் எட்டுப் பெண்களும் வெற்றிபெற்றுள்ளனர். குஜராத்தில் கடந்த தேர்தலில் 15 பெண்கள் வெற்றிபெற்றிருந்தனர்.

---

## பாடசாலை சீர்கேடு

கோண்டாவில்- ஞாயிறு

கோண்டாவில் வடக்கில் உள்ள ஒரு ரோமன் கத்தோலிக்க பாடசாலைமிகவும் சீர்கேடான நிலையில் உள்ளது. சுவர்கள் இடிந்து காணப்படுகிறது. தளபாடங்களும், உபகரணங்களும் போதியளவு இல்லாததால் பிள்ளைகள் தரையில் இருந்தே கற்கவேண்டியிருக்கிறது. அவ்வூர்மக்கள் நல்லூர் எம்.பி.யிடம் புகார் செய்துள்ளதைத்தொடர்ந்து பாடசாலையை திருத்துவதற்கு இப்பொழுது நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகத் தெரியவருகிறது.

## தேர்தலில் குதித்த அரசகுடும்பம்

ராஜஸ்தானில் அரசகுடும்பத்தைச் சேர்ந்த 14 பேர் போட்டியிட்டனர். இவர்களில் நால்வர் லோக சபைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். சட்டசபைக்கு 7 பேர் வெற்றிபெற்றுள்ளனர்

பீஹாரில் ஒரு தொகுதியில் போட்டியிட்ட காலஞ்சென்ற இந்திய ராஷ்டிரபதி டாக்டர்ராஜேந்திரபிரசாத்தின் மகன் வெற்றிபெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## கூடுதல் வாக்குகள்

கூடுதலான வாக்குகளைப் பெற்ற பெருமை இந்திய உள்துறைமந்திரிதிரு. வை. பி. சவானுக்குக் கிடைத்திருக்கிறது. இவருக்கு 2 லட்சத்து 70 ஆயிரத்து 95 வாக்குகள் கிடைத்திருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "புதையல் எடுக்கவே பொருள் செலவிட்டார்; எங்களையும் கொல்லமுயன்றார்"

## "கார்த்திகைக்காய்" முக்கொலை வழக்கில் சாட்சியம்

மாவிட்டபுரம், ஞாயிறு

'எங்கள் வீட்டுப் பூசை யறையில் இரவு வேளைகளில் காணப்படும் பாலம்பிட்டிப் பெண் 18 வயதிற்குட்பட்டவர். அவரைப் பிடித்திருக்கும்பேயை ஒட்டுவதற்காக அவரைக் கூட்டி வந்ததாக எதிரிகள் கூறினார்கள். எதிரிகளை இராசன்என்பவர் வந்து கூட்டிக்கொண்டு சென்றே பாலம்பிட்டிப் பெண்ணை அழைத்துவந்தார்கள். கார்த்திகைக்காய் உண்டதனல் தான் எனதுபிள்ளைகள்இறந்தார்கள். அதில் எனக்கு எவ்விதமான சந்தேகமும் இல்லை.''

வட்டுக்கோட்டை 'கார்த்திகைக்காய்' முக்கொலை வழக்கு இன்று மல்லாகம் நீதிபதி திரு. டி. எஸ். நிற்சிங்கா முன்னிலையில் தொடர்ந்து விசாரணைக்குஎடுத்துக் கொள்ளப்பட்டபோது தொடர்ந்துசாட்சியமளித்த காலஞ்சென்ற பிள்ளைகளின் தாயாரானவிசாலாட்சிமேற் கண்டவாறு கூறினர்.

வட்டுக்கோட்டை கிழக்கைச்சேர்ந்தவர்களான சரஸ்பதி தியாகராசா [மந்திரவாதி] இராமசாமி காசிப்பிள்ளை [பிள்ளைகளின்தந்தை] ஆகிய இருவரும் சென்றவருடம் நவம்பர் மாதம் 28ம் திகதி காசிப்பிள்ளையின் பிள்ளைகளான பாக்கியலட்சுமி [5] இராசேந்திரம்[8] வைரவநாதன் [3] ஆகிய மூவரையும்கொலை செய்ததாகவும், காசிப்பிள்ளையின்மனைவி விசாலாட்சியையும், விசாலாட்சியின் மகள் சரோஜினிதேவியையும் கொலைசெய்ய முயன்றதாகவும், சங்கானைப்பொலிசாரால் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானர். சங்கானைப்பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஸி. டி. மெண்டிஸ் வழக்கை நடத்தினர்.

### கேள்விக்குமட்டும் பதிலளிக்கவும்

இன்று விசாலாட்சியை எதிரிகள்தரப்புவழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்கையில் விசாலாட்சி அடிக்கடி அழுது அழுதுதான் சாட்சியமளித்தார். விசாலாட்சி தனது சாட்சியத்தின்போது வழக்கறிஞரின் கேள்விக்கு மட்டும் பதிலளிக்காமல் மேலும் சாட்சியமளித்தார். இதனல்நீதிபதி சாட்சியிடம் திறந்த பைப்பினைப்போல் தொடர்ச்சியாக சாட்சியமளிக்க வேண்டாமென்றும் கேட்கிற கேள்விக்கு மட்டும் பதிலளிக்கும்படியும் கூறினர் வேறு ஒரு கட்டத்தில் "சத்தியவாக்குச் செய்து சாட்சியமளிக்கையில் உண்மையைப் பேசவேண்டும். இப்பொழுது கணவன்மீது கோபம் என்றதைக் காட்டத்தேவையில்லை. கோபப்படுகிறதனல் பிரயோசனமில்லை. நடந்ததைப்பற்றி நன்ருக யோசித்து மறுமொழிசொல்ல வேண்டும். உமது மூன்று பிள்ளைகளும் இறந்துவிட்டார்கள் என்பதை நீதிமன்றம் நம்புகிறது. இச்சம்பவம் உமக்கு நடந்தமாதிரி நினைத்துச் சாட்சியமளிக்காமல் வேறு ஒருவருக்கு நடந்தமாதிரி நினைத்துச் சாட்சியமளிக்க வேண்டும்'' என்று கூறினர். வழக்கறிஞர் திரு. செல்வரத்தினம் ஒருகட்டத்தில் சாட்சியிடம் "உமது பிள்ளைகள் மூன்று இறந்து ... எதிரிகளைத் தூக்குத் தண்ட...

ளைக்குஅனுப்பவேண்டுமென நினைப்பது கூடாது'' என்று கூறினர்.

### மகளைக் கட்டித் தழுவினர்

ரிமாண்டிலிருக்கும் 2-வது எதிரியான இராமசாமி காசிப்பிள்ளை 88 நாட்களின் பின் தனது மூத்தமகளான சரோஜினிதேவியை கோர்ட்டில் கண்டதும் கட்டித் தழுவி முத்தமிட்டார். இச்சம்பவம் இன்று இவ்வழக்கு விசாரணை முடிந்து எதிரிகளை வெளியில் கொண்டுவந்த பொழுது கோர்ட் விருந்தையில் நடைபெற்றது. சரோஜினிதேவி இவ்வழக்கில் ஒரு முக்கிய சாட்சி என்பதும், அவரும் கார்த்திகைக்காய்க்கறி உண்டு யமன் வாயிலிருந்து தப்பியவரென்பதும், இன்றுதான் முதல் தடவையாகச் சரோஜினிதேவி கோர்ட்டிற்கு வந்திருந்தாரென்பதும் குறிப்பிடத்தக்கது.

விசாலாட்சியை எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் திரு. செல்வரத்தினம் இன்று தொடர்ந்து குறுக்கு விசாரணைசெய்தார். சாட்சி குறுக்கு விசாரணையில் கூறியதாவது,

நான் பொலிஸாருக்கு முன்பு கொடுத்த வாக்குமூலத்தில் கார்த்திகைக்காய் பற்றி கூறினேன். இந்தக் காய்களை உண்டதனல்தான் எனது பிள்ளைகள் இறந்தார்கள் அதில் எனக்கு எவ்வித சந்தேகமும் இல்லை.

நான்பொலிஸாருக்கு முதலாம் எதிரி எங்கள் குடும்பத்தை நாசமாக்குவதற்காக நஞ்சுக்காயோ, அல்லது ஏதோ மருந்து கொடுத்து இருக்கிருர் என்று கூறியதாக நினைவு இல்லை. ஆனல் காயைப்பற்றிக் கூறினேன். நவம்பர் மாதம் 28-ம் திகதி எனக்கு விருப்பமில்லாத போதிலும் இரண்டு எதிரிகளாலும் வற்புறுத்தலுக்காக கார்த்திகைக்காயைச் சமைத்தேன். எனக்கு எதிரிகள் எப்படிச் சமைப்பது என்பதைச் சொல்லித் தந்தார்கள். அவர்கள் காய்களை வெட்டி முதலில் பொரித்து பின்னர் சாதாரணமாகக் குழம்பு வைப்பது போல சமைக்கும்படி கூறினர்கள். வழக்கமாகக் காய்களை இப்படிச் சமைப்பதில்லை.

### கணவருக்கு கறி கொடுக்கவில்லை

நான் சமைத்த கறியை எனதுகணவருக்குச் சாப்பிட்டுப் பார்க்கும்படி கொடுக்கவில்லை. ஏனெனில் என்னில் இருந்துதான் பூச்சிகள் பிள்ளைகளுக்கு உண்டாகிறகிறதென்றும் ஆனபடியால் என்னையும் பிள்ளைகளையும் சமைத்துச் சாப்பிடும்படியும் தனக்கு வேண்டாமென்றும் கூறினர். ஏன் எங்களை மட்டும் சாப்பிடச் சொல்லுகிறீர் என்று கேட்டபோது

[6-ம் பக்கம் பார்க்க]

## நடுக்கடலில் அசைந்தாடிய நவீன மீன்பிடிப் படகு

### தாளையடி மீனவர் ஒருவர் கரைக்குச் சேர்த்தார்

தாளையடி, ஞாயிறு

நடுக்கடலில் ஆட்களெவருமில்லாது அசைந்தாடிக் கொண்டிருந்த நவீன மீன்பிடிப் படகொன்று மீனவரொருவரால் தாளையடிக் கரைக்குச் சேர்க்கப்பட்டுள்ளது. இந்தப்படகு வெளிநாட்டைச்சேர்ந்தது.

30 அடி நீளமுள்ள இப்படகு மூங்கிலால் அழகாக அமைக்கப்பட்டுள்ளது. படுக்கை வசதிகள் உள்ள இப்படகில் மீன்பிடி வலைகளும் இருநதனவாம்.

கடலில் சூசைப்பிள்ளை தனது இயந்திரப்படகில் மீன்பிடித்துக்கொண்டிருந்த போது இந்தப்படகு நடுக்கடலில் மிதந்து கொண்டிருப்பதைக்கண்டு, தனது இயந்திரப்படகின் உதவியால் அந்தப்படகை கரைக்கு மீட்டார் என்று கூறப்படுகிறது.

இப்பகுதி மீன்பிடிப் பரிசோதகர் திரு. ராமநாதனுக்கு இவ்விஷயம் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இப்படகை அவர் வந்து பார்வையிட்டார். இப்படகு சீன அல்லது ஜப்பானைச் சேர்ந்ததாக இருக்கலாமென அவர் அபிப்பிராயம் தெரிவித்தார். பரவைக்கடலில் மீன்பிடியிலீடுபட்ட படகேஇந்த "பரிதாப" நிலைக்குள்ளாகியிருக்கலாமென்றும் அவர் கூறினர்.

இப்பகுதிக் கிராமசேவகர் இந்தப்படகைப் பொறுப்பேற்றுக்கொண்டார். இந்தப்படகை வெளியிடங்களிலிருந்து பலரும் வந்து பார்வையிட்டுக்கொண்டிருக்கின்றனர்.

---

உடுப்பிட்டி, ஞாயிறு

துன்னலை தெற்கு கிராமசேவகர் திரு. க. வீரகத்திப்பிள்ளை கற்கோவளத்திற்கும், பருத்தித்துறை கிராமசேவகர் திரு. பி. கனகராசா துன்னலை தெற்கிற்கும், கற்கோவளம் கிராமசேவகர் திரு. எஸ். நடேசபிள்ளை பருத்தித்துறைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.


# பார்க்கர்




## எல்லா பேனைகளுக்கும் உகந்த சிறந்த மை!

- புதிய பேனைகளை புத்துணர்ச்சி பெறச் செய்கின்றது.
- பழைய பேனைகளை புதிய ஜீவன் பெறச் செய்கின்றது.

உங்கள் பேனை புதியதோ, பழையதோ, என்ன ரகமோ, என்ன விலையோ - ஆயினும் அதற்கு பார்க்கர் சுப்பர் குயிங்க் மை நிரப்புவது அத்தியாவசியமே! பேனைகள் எழுத தயங்கினுல், தாமதித்தால் அது பேனைகளின் குற்றமல்ல; பாவிக்கும் மையின் குற்றம்! தரம் குறைந்த மைகள், குழாயில் அடைசலையும் தடங்கலையும் உண்டாக்கி எழுத்து முனையை "வாடச்" செய்கின்றன. இச்சந்தர்ப்பங்களில்தான் நீங்கள் சொல்வ் - X உடைய சுப்பர் குயிங்க் மையை நிரப்பவேண்டும். உங்கள் பேனையில் சுப்பர் குயிங்கினை நிரப்புங்கள்! இதிலுள்ள சொல்வ் - X அடைசலை அகற்றி..... எழுதும்போதே பேனையை சுத்திகரிக்கும்!

பள்ளிவேலைக்கும், வீட்டுவேலைக்கும் பாவியுங்கள் கழுவக்கூடிய ரோயல் புளு

நிரந்தரமான கந்தோர் ரெக்கார்டுகளுக்குப் பாவியுங்கள்! பெர்மனன்ட் புளு, பிளக், புளு - பிளக், ரெட், கிரீன் மற்றும் டர்குயிஸ் புளு.

பார்க்கர் பென் கம்பனிக்காகத் தயாரிப்பவர்கள்

ராஜேந்திரம்ஸ் லிமிட்டெட்



## கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம்

### லங்கா சாரங்களின் புது விலைகள்

கீழ்க்காணும் உள்ளூர்ச் சாரங்கள் போதுமான அளவில், அந்தந்த ரகங்களுக்கு நேரே குறிப்பிட்டுள்ள விலைக்கு எல்லா கூ. மொ. வி. ஸ்தாபனக் கடைகளிலும் தங்கு தடையின்றிக் கிடைக்கும்.

1. லங்கா சாரம் முதலாம் ரகம் (29"×4¼" யார்)

| | சில்லறை விலை |
|---|---|
| 9%, 22% நிறம் | ரூ. 8-00 |
| 9%, 22% நிறம். விசேஷமாகத் தயாரித்து செலபேன் பைகளில் அடைக்கப்பட்டவை | ரூ. 8-25 |
| சாயமூட்டி விசேஷமாகத் தயாரித்து செலபேன் பைகளில் அடைக்கப்பட்டவை | ரூ. 8-50 |
| 45% நிறம் | ரூ. 8-50 |
| 100% நிறம் | ரூ: 8-50 |
| 2. லங்கா சாரங்கள் முதலாம் ரகம் (50") | ரூ. 6-55 |

3. லங்கா சாரங்கள் 60×40 (29"×4¼" யார்)

| | |
|---|---|
| 9%—12% நிறம் | ரூ. 7-35 |
| விசேஷமாகத் தயாரித்து, செலபேன் பைகளில் அடைக்கப்பட்டவை | ரூ. 7-35 |
| சாயமூட்டி, விசேஷமாகத் தயாரித்து, செலபேன் பைகளில் அடைக்கப்பட்டவை | ரூ. 7-60 |

4. லங்கா சாரங்கள் 40×40 (29"×4¼" யார்)

| | |
|---|---|
| 9%—12% நிறம் | ரூ. 6-65 |
| 9%—12% நிறம் விசேஷமாகத் தயாரித்து, செலபேன் பைகளில் அடைக்கப்பட்டவை | ரூ. 6-95 |
| சாயமூட்டி, விசேஷமாகத் தயாரித்து, செலபேன் பைகளில் அடைக்கப்பட்டவை. | ரூ. 7-25 |

மொத்தமாகக் கொள்வனவு செய்வோருக்கு வியாபாரிகளுக்குரிய தள்ளுபடி கொடுக்கப்படும்

விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:

முகாமையாளர்,

கூ. மொ. வி. ஸ்தாபனம்,

ஜவுளி விநியோகம்,

82, ஜாவத்தை ரேட்டு, கொழும்பு 5


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## தேவை

வட இலங்கைக் கூட்டுறவுப்
பாற் பொருள்
உற்பத்தியாளர்
பாவிப்பாளர் சங்கம்
யாழ்ப்பாணம்.

மேற்படி சங்கத்துக்கு முகாமையாளர் ஒருவர் தேவை. கீழ்க்காணும் தகமையுடையவர்கள் தமது விண்ணப்பத்தை கௌரவ காரியதரிசி, வட இலங்கைக் கூட்டுறவு பாற்பொருள் உற்பத்தியாளர் பாவிப்பாளர் சங்கம், 67 1 அரசடி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 5-3-67-ம் திகதிக்குமுன் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் மனுச் செய்தல்வேண்டும். தபால் உறை இடது பக்க மேல் மூலையில் ''முகாமையாளர் பதவி'' என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

தகுதிகள்:

[1] வயது25க்குமேலுள்ளவராயும்,

[2] கணக்கெழுதுவதில் அனுபவமும்,

[3] முகாமையாளர் வேலை அனுபவமும்,

[4] கூட்டுறவுப் பயிற்சியும் பெற்றிருத்தல் வேண்டும்.

[5] பிணை ரூபா: 3000/- ரொக்கமாகவோ அல்லது பகுதிரொக்கமாகவும் மிகுதி ஆதனப் பிணையாகவும் செலுத்தப்படவேண்டும்.

சம்பளம் ரூபா:
150/- — 300/-
10X15/-

சு. பரநிருபசிங்கம்,
கௌரவ காரியதரிசி.

2453

## கட்டிடத்திருத்த ஒப்பந்தம்

எங்கள் காரைநகர், புங்குடுதீவு மொத்தக்கிளை ஸ்தாபன கட்டிடங்களை பழுது பார்ப்பதற்கு, அதன் வேலையைக் கணித்து ஒப்பந்தம் எடுக்கவிரும்புவோர் 10-3-67-ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

முகாமையாளர்
பல நோ. கூ. சங்க
தீவுப்பகுதி சமாசம்,
ஊர்காவற்றுறை.

1072

## புனருத்தாரணம்

கனகராயன்குளம் ஞாயிறு

வவனிக்குளம் சிவாலயத்தின் புதிய கட்டிடத்தில் வவனிக்குளப்பொறியியலாளர் திரு.வி.எல். வேலுப்பிள்ளை துணுக்காய் காரியாதி திரு.ரி.இராசரத்தினம் ஆகியோரின் முயற்சியால் இம் மாதமுடிவுக்குள் பிள்ளையார் ஸ்தானமும் முகப்பும் முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்தச்சிவாலயம் பண்புடைய மன்னர்களால் கட்டப்பட்டதென்பதும் இது அன்னியர் வருகையின்போது அழிந்து கிடந்து வவுனிக்குளத்திட்டத்தை நிர்மாணிக்கும்போது கண்டு பிடிக்கப்பட்டதென்பதும் குறிப்பிடத்தக்கது.


REGAL - JAFFNA
NOW SHOWING
Van Heflin
Rita Moreno
in
CRY OF BATILE

MANOHARA
JAFFNA
Daily at 4-45, 7-00, 9-45
BRETT HALSBY
as Secret Agent 077
in
Espionage in Lisbon

மார்ச் 1-ம் திகதி புதன் முதல்

கிங்ஸ்லி கொழும்பு | பிளாஸா வெள்ளவத்தை | நவா கொம்பனித்தெரு
விஜயா மட்டக்களப்பு
மற்றும் சில திரைகளில்

எம். ஜி. ஆர். — சரோஜாதேவி
நடித்த
தாயின் மடியில்

கடைசி 2 தினங்கள்
கிங்ஸ்லி கொழும்பு | பிளாஸா வெள்ளவத்தை | நவா கொம்பனித்தெரு

2-வது வாரம்
வெலிங்டன்
யாழ்ப்பாணம்

அன்பு பாசத்தால் பிணைக்கப்பட்ட ஒரு டாக்டர்!
கால் ஊனம் ஆனதால் தாழ்வு மனப்பான்மை
கொண்டு தத்தளிக்கும் அவர் தங்கை!!
அருமைக் கணவன்மீது சந்தேகங் கொண்ட
அவர் மனைவி!! இவர்கள் மூவரின் கதை-

எஸ். எஸ். ராஜேந்திரன்
விஜயகுமாரி, எஸ். வி. சுப்பையா
எல். விஜயலக்ஷ்மி, நாகேஷ், மணிமாலா
முதலியோர் நடிக்கும்
காக்கும் கரங்கள்


# புதையல் எடுக்கவே ....

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

தான் இந்த மறுமொழி கூறினார். நான் சமைத்த பிறகு சாப்பிடும்படி அவரைக் கேட்டேன். அவர் தனக்குப் பூச்சி இல்லை என்று வேண்டாம் என்றும் கூறினார்.

நான் பொலிசாருக்கு வாக்குமூலமளித்த போது எதிரிகள் எனது பிள்ளைகளை கொலைசெய்து இருக்கிறார்கள் என்பது தெரியும். நான் பொலிசுக்கு எவ்வித சந்தேகமும் இல்லை என்று கூறவில்லை. இரு எதிரிகளும் சேர்ந்துதான் செய்தார்கள் என்று கூறினேன்.

காய்க சமைத்துச் சாப்பிட்டபிறகு கடைசிப் பிள்ளைக்கு காரைநகரில் ஆயுர்வேத சிகிச்சை அளிக்கப்பட்டது. அந்தவைத்தியரின் பேர் எனக்குத் தெரியாது. பிள்ளைகளுக்குக் கார்த்திகைக்காய் கொடுத்தபின் பிள்ளைகளைப் பரிசோதித்தார். ஆனால்மருந்து கொடுக்கவில்லை. அவர் தனது பரிசோதனையின் போது பிள்ளைகளுக்கு ஏதோ நஞ்சு கொடுக்கப்பட்டிருப்பதாகக் கூறினார். நான்எனது மகளை அனுப்பி வேலாயுதப் பரியாரியாரைக் கூப்பிட்ட போது எதிரிகள் அதனை ஆட்சேபிக்கவில்லை. ஆனால் வேலாயுதம் பரியாரியை அழைத்தது தெரியாது.

பிள்ளைகளைக் கொட்டைக்காடு ஆஸ்பத்திரிக்கு கொண்டு போனபோது கணவரின் சிறியதாயும் எங்களுடன் வந்தார். எனது வற்புறுத்தலின்பேரில்தான் எனது கணவர் குழந்தைகளை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்றார். நான் முதலில் ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோகும்படி கணவரிடம் கூறியபோது அவர் மந்திரவாதியின் மருந்தை கொடுத்தால் மாறிவிடும் என்றுசொன்னார் நான் வற்புறுத்தியதன் பேரில்தான்ஆஸ்பத்திரிக்குக் கூட்டிப்போனார்.

எனதுகணவர் காசையும், பொருட்களையும் அழிப்பதும் என்னையும் பிள்ளைகளையும் கொலைசெய்வதற்கு முயன்றதும் புதையல் எடுப்பதற்காகவே என்பது எனக்குத் தெரியும். நான் பொலிசாருக்குகொடுத்தவாக்குமூலத்தில் எனது கணவர் மந்திரவாதியுடன் சேர்ந்து எமது பொருடகளை அழித்ததும், கார்த்திகைக்காய் தந்துபிள்ளைகளைக் கொன்றதும், என்னைக்கொலைசெய்ய முயன்றதும் புதையல் எடுப்பதற்கென்றே கூறினேன்.

### முதல் புதையல் கண்மலர்

எனது வாழ்க்கையில் முதல்தடவையாக ஆஸ்பத்திரியால் வந்த பிறகு கண்மலரைக் கண்டேன். அறையைச் சோதித்தபோதுதான் அதனைக் கண்டுபிடித்தேன். ஒருநாள்மந்திரவாதி தனக்கு கலை வருவதாகக்கூறி, தனது மடியிலிருந்து கண்மலரை எடுத்து எனது கணவரிடம் கொடுத்து இதுதான் நீ எடுத்த முதலாவது புதையல் என நினைத்துக்கொண்டு அதனை வணங்கும்படி கூறினார். இதனைத்தொடர்ந்து எனது கணவர் சந்தனப் பலகை வாங்கி ஒருபெட்டி செய்துஅதற்குள்கண்மலரை வைத்து பூசை அறையில் வைத்து பூசித்து கண்ணில் ஒற்றிவணங்கினார். கண்ணில் நோய் உள்ளவர்கள் தங்களுடைய நோய் தீருவதற்காக கண்மலர் செய்வித்து கோயிலுக்கு காணிக்கை செய்வதுண்டு என்பதனை மறுக்கிறேன். ஒன்றரை வருடத்துக்கு முன் எனது கணவருக்கு கண்ணில் சுகவீனம் ஏற்பட்டது என்பதனைமறுக்கிறேன். பிள்ளைகளை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகும்போது எனது கணவரின் காலில் புண் இருந்தது. நான் அதற்கு மருந்துகட்டவில்லை. அவர் வட்டுக்கோட்டையில் வைத்தியம் செய்வித்தார்.

### பூசைஅறையில் பேய்ஓட்டினர்

பாம்பிட்டிப் பெண்ணின் பெயர்புவனேஸ்வரி அவர்18 வயதுக்குட்பட்டவர். அவர் இராசன் என்னும் 20 வயது இளைஞனை விவாகம் செய்துள்ளார். இராசன் ஒரு மெல்லிய இளைஞன். எனது வாழ்க்கையில் ஒருநாள் தற்செயலாகபுவனேஸ்வரியைச் சந்தித்தேன். நான் இருத்தலிடிக்குச் சென்றபோது புவனேஸ்வரியும் அவரது கணவரும் எனது கணவரின் தாயாரின் வீட்டுக்கு அடிக்கடி வருவதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். புவனேஸ்வரி பாலம்பிட்டியைச் சேர்ந்தவர் என்றும் அவர் பேயினால் பீடிக்கப்பட்டு இருக்கிறார் என்றும் எனது கணவர் கூறினார்.

ஒருநாள் இராசன்வந்து பாலம்பிட்டிப் பெண்ணுக்கு பேய்பிடித்து ஆட்டுவதாகக் கூறி எனது கணவரையும் மந்திரவாதியையும் கூட்டிக்கொண்டுபோனார். பாலம்பிட்டியில் பேயை ஓட்ட முடியவில்லை என்று கூறி பாலம்பிட்டிப்பெண்ணை மந்திரவாதி, எங்கள் வீட்டுப் பூசை அறைக்குக் கூட்டி வந்து பூசைசெய்து பேயை ஓட்டுவதில் ஈடுபட்டார்கள்.

நீதிபதி இந்த நிலையில் மேல்விசாரணையை அடுத்த மாதம் 7-ந் தேதிக்கு ஒத்தி வைத்து அத்திகதிவரை இரு எதிரிகளையும் ரிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

## வானொலி அஞ்சல்

திருக்கேதீச்சரம், ஞாயிறு

திருக்கேதீச்சர ஆலயத்தில் நடைபெறும் சிவராத்திரி விழா நிகழ்ச்சிகளை இலங்கை வானொலி இரவு 10-30 மணி தொடக்கம் மறு நாட் காலை 6 மணிவரை அஞ்சல் செய்யும்.

## வானொலி நிகழ்ச்சிகள்

**திங்கள் 27 - 2 - 67**

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கத்தோலிக்க நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-20 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 வளரும் பயிர்.

இரவு 6-15 பாட்டு, 6-45 கிராமசஞ்சிகை, 7-15 விவேகச்சக்கரம், 7-45 தமிழ் மூலம் சிங்களம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம், 10-00 நேயர் விருப்பம்.


ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30 6-30, 9-45
போயாதினங்களில் 4 காட்சிகள்
நெஞ்சில் ஓர் ஆலயம்
[சிங்களம்]

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30. 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
சிவாஜி - தேவிகா
நடித்த
ஆண்டவன் கட்டளை


# வரி விளம்பரம்

## திருமணம்

சிவா - சுகிர்தம் — சுண்டுக்குழியைச் சேர்ந்த கே. செல்லையா தம்பதிகளின் மகனும், கல்முனை மக்கள் வங்கியில் கடமையாற்றுபவருமான சி. சிவானந்தம், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிஓய்வுபெற்ற ஆசிரியரும், சுண்டிக்குளியைச் சேர்ந்தவருமான திரு. சாம்ரி. சொலமன்ஸ் திருமதி சொலமன்ஸ் ஆகியோரின் மகளான ஜொயிஸ் சுகிர்தரத்தினத்தை திருமணம் செய்துகொண்டார். ஜொயிஸ் ஹவுஸ் சொலமன்ஸ் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 1578

## தேவை

வாலிபர்கள்

கோழிவளர்ப்பில் ஆர்வமுள்ள 24 வயதுக்கு மேற்பட்ட வாலிபர்கள் மனுச் செய்க. விசேஷ பயிற்சி பெற்றவர்கள் அத்தாட்சிப் பத்திரங்களை பதிவுத் தபாலில் அனுப்புக. அருண ஏஜென்ஸீஸ், அளவெட்டி.
1575

தொழிலாளி:

சவற்காரத் தொழிற்சாலைக்கு அனுபவமுள்ள தொழிலாளி தேவை. தொழிற்திறமைக்கு ஏற்ப ஊதியம் வழங்கப்படும். விண்ணப்பங்கள், C. M. நடராசா, தங்கமணிவாசா, கரவெட்டி கிழக்கு என்னும் முகவரியில் 2-3-67 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.
1579

## விற்பனைக்கு

காணி:

சுன்னாகம் ஸ்ரேசனிலிருந்து புன்னாலைக்கட்டுவனுக்குப்போகும் மெயின் வீதிக்கு அருகாமையில் இருக்கும் வீடு கட்டும் காணி 10 பரப்பு விற்பனைக்கு இருக்கிறது. தொடர்பு கொள்க: ஆ. சரவணமுத்து, மயிலினி, சுன்னாகம். 1576

காணி:

சாவகச்சேரி தபாற் கந்தோர் வீதியில் திறமான 6 பரப்பு நிலக்காணி மூன்று மூன்று பரப்பாக விற்கப்படும். பெண்பாடசாலைக்கு அண்மையில், தபாற் கந்தோரிலிருந்து 1/4 மைல். விபரத்திற்கு விளம்பர இல. 1577, 'ஈழநாடு' மே./பா. என எழுத்து மூலம் உடனே விண்ணப்பிக்கவும். 1577

## வாடகைக்கு

வீடு:

உடுவில் பெண்கள் பாடசாலை, டிஸ்பென்ஸரி ஆகியவற்றுக்கு அருகாமையில் நவீன வசதிகளையும் கொண்ட [தண்ணீர் வசதி, இணைப்பான குளிக்கும் அறை மற்றும் வசதிகளுடன்] வீடு வாடகைக்கு உண்டு. சித்திரை மாதம் முதல் திகதிக்கு முன்னர் தொடர்புகொள்க. - தர்மலிங்கம், 9, ருத்ராமாவத்தை, வெள்ளவத்தை
2350

## அபராதம்

சாவகச்சேரி, ஞாயிறு

ஒரு வழக்கு விசாரணைக்கு வரும்படி சம்மன்ஸ் வழங்கப்பட்டு, அதைப்பெற்ற ஒருவர் குறிப்பிட்ட தவணையின் போது கோர்ட்டிற்குச் சமூகமளிக்காமையினால் அந்த நபரை அக்குற்றத்திற்காகக் கோர்ட்டிற்கு அழைத்துத் தண்டனை வழங்கிய சம்பவமொன்று சாவகச்சேரி நீதிமன்றத்தில் நிகழ்ந்துள்ளது.

ஆறுமுகம் துரைராசா என்பவரே அந்தநபராவார். இவர் தனதுகுற்றச்சாட்டை ஒப்புக்கொள்ளவே மாஜிஸ்திரேட் திரு. ஆர். இளையபெருமாள் அவருக்கு ரூபா 25 அபராதம் விதித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு

# தொகுதிக்கு இரு உயர்தர கல்லூரி; ஒரு தொழில் நுட்பக்கல்லூரி

## கோப்பாய் எம. பி. தகவல்

புன்னாலைக்கட்டுவன், சனி "பாடசாலைகளை அரசாங்கம் மேற்கொண்டபோதிலும், அவை தொடர்ந்து எமது மக்களின் கல்வி வளர்ச்சிக்கே பயன்படும். அவற்றை எமது சொத்தாகக் கொண்டு விஸ்தரிப்பது எமது கடமை."

இவ்வாறு உரும்பிராய் இந்துக்கல்லூரி பெற்றோர் ஆசிரியர்சங்க விழாவில் கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேற்பிள்ளை பேசுகையில் கூறினார். அதிபர் திரு. அ. வைத்தியலிங்கம் தலைமைவகித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"எதிர்காலத்தில் கல்வித்துறையில் பெருமாற்றங்கள் ஏற்படவிருக்கின்றன. ஒவ்வொரு தேர்தல் தொகுதிக்கும், இரு உயர்தரக் கல்லூரிகளும், ஒரு தொழில் நுட்பக்கல்லூரியும் கட்டப்படும். இவற்றைவிட மற்றைய பாடசாலைகளும்இயங்கும். அரசாங்கம் ஒதுக்கும் கல்விக்கான பணத்தில் 92 சதவீதத்தை ஆசிரியரின் சம்பளத்துக்கே செலவிடுவதால் கட்டடங்களைக் கட்டவியலாது,"

---

வடபகுதி

# உள்ளூராட்சிமன்ற உணவுபெருக்கம் ஆணையாளர் சுற்று நிருபம்

யாழ்ப்பாணம், ஞாயிறு உள்ளூராட்சி மன்றங்கள் வடபகுதியில் எவ்வாறு உணவு உற்பத்தியில் ஈடுபட்டு உணவு உற்பததியை பெருக்கவேண்டுமென்பதை வலியுறுத்தி வடபகுதி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. எஸ். வி. மாணிக்கவாசகர் சுற்றுநிருபமொன்றை வடபகுதியிலுள்ள எல்லா உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அனுப்பியுள்ளார்.

அவர் அனுப்பியுள்ள சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது- தற்பொழுது நாட்டில் நிலவும் உணவுநெருக்கடியை நிவர்த்திசெய்ய உள்ளூராட்சி மன்றங்களும் அங்கத்தவர்களும் முன்வரவேண்டும். அத்துடன் உள்ளூராட்சி மன்றத் தலைவர் முதல் சிலவறை ஊழியர்வரை இப்பணியில் ஈடுபட்டு நாட்டின் அபிவிருத்திக்காகச் சேவை செய்யவேண்டும். தற்பொழுது வெறும் நிலப்பரப்பாக உள்ளூராட்சிமன்றக் காரியாலயங்களில் காணப்படும் காணிகளில் தோட்டங்கள் முதலியவற்றை ஆரம்பித்து பொதுமக்களுக்கும் ஓர் உதாரணமாகத் திகழவேண்டியது உங்களது தலையாய கடனாகும்.

அத்துடன் உங்கள் எல்லைகளுக்குட்பட்ட இடங்களில் கட்டாக்காலிகள் திரிந்து கமக்காரர்களுக்கு இடையூறு விளைவிக்காவண்ணம் தங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்குள் நடிவடிக்கை எடுக்கும்படியும் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

---

ஆலயப்பிரவேசம்

# 'சட்டம் போதும் சத்தியாக்கிரகம் வேண்டாம்'

## கோப்பாய் எம். பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு "சத்தியாக்கிரகம் வேண்டாம். சட்டத்தை அமுல் நடத்தமுன் வாருங்கள்" என்று கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேற்பிள்ளை சிறுபான்மை சமூகத் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக சத்தியாக்கிரகம் நடத்த சிறுபான்மை சமூகத்தினர் தீர்மானித்திருப்பது குறித்து கவலைதெரிவித்துள்ள கோப்பாய் எம். பி. தமது செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது-

"ஆலயப் பிரவேசத்துக்கு சத்தியாக்கிரகம் அவசியமல்ல. காந்தியடிகளும் இதனைத்தான் வலியுறுத்தியுள்ளார். ஆலயப் பிரவேசத்துக்கு இன்றையச் சட்டம் நல்ல பலனளிக்கும். சத்தியாக்கிரகத் திட்டத்தைக் கைவிட்டு சட்டத்தை அமுல் நடத்த முன்வரவேண்டும். 1957-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சமூக குறைபாடுகளை விலக்கும் சட்டத்தின் மூன்றுவது ஷரத்தின் 'பி' பிரிவின் கீழ் ஆலயங்களுக்குள் பிரவேசிப்பவர்களைத் தடுப்பது குற்றமாகும். இச்சட்டத்தை அமுல் நடத்த தலைவர்கள் முன்வரவேண்டும்".

---

# முகம்மதலிக்கு தமிழரசு செயலாளர் கடிதம்

## எம்.பி.பதவியை ராஜினுமாச்செய்யவற்புறுத்தல்

யாழ்ப்பாணம், சனி எம். பி. பதவியை ராஜினுமா செய்யும்படி மூதூர் எம். பி. ஜனுப் எம். ஈ. எச். முகம்மதலிக்குதமிழரசுக்கட்சி செயலாளர் திரு ஏ. அமிர்தலிங்கம் எழுதியுள்ள ஒரு கடிதத்தில் கேட்டுள்ளார்.

ஜனுப் முகமதலிக்கு தமிழரசுக்கட்சி செயற்குழுவின் தீர்மானப்படி விளக்கம் கோரி எழுதப்பட்ட கடிதங்களுக்கு அவரிடமிருந்து பதில் கிடைக்கவில்லை என்று குறிப்பிட்டுள்ள தமிழரசுக்கட்சியின் செயலாளர் இம்மாதம் 23-ந் திகதி கட்சியின் செயற்குழு கூடி ஜனுப் முகம்மதலியின் நிலை பற்றி பரிசீலனை செய்து கட்சியின் கட்டுப்பாட்டை மீறியதற்காக கட்சியில் இருந்து நீக்குவதென்று தீர்மானித்ததாகவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

மூதூர் தொகுதிக்கு கட்சியின் சார்பில் நிறுத்தப்பட்டபோது ஜனுப் முகம்மதலி கட்சிக்கு கொடுத்துள்ள வாக்குறுதியை சுட்டிக் காட்டியுள்ள அவர் கண்ணியமுள்ள கனவான் என்ற முறையில் பாராளுமன்ற உறுப்பினர் பதவியையும் ராஜினுமாச் செய்யும்படி கோரியுள்ளார்.

---

# தம்பதிகள் மரணம்

யாழ்ப்பாணம், ஞாயிறு சாவகச்சேரியில் வன்னியபளை எனுமிடத்தில் தம்பதிகள் படுத்தபடுக்கையிலேயே மரணமாகியிருக்க காணப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இவர்களது சடலங்கள் அருகருகே கிடந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ராஜக்கிளி ராஜமணி ஆகிய இந்த தம்பதிகளின் மரணம் சம்பந்தமாக சாவகச்சேரி பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி திரு. எம். ஜெயசேனு விசாரணை நடத்தி வருகிறார்.

---

# நிசாமின் இறுதிச்சடங்கு

ஹைதராபாத், பெப். 25 காலம்சென்ற ஹைதராபாத் நிசாமின் இறுதிச்சடங்கில் இன்று சுமார் 5 லட்சம் பேர் கலந்துகொண்டனர். பிரதமர் திருமதி இந்திரா, உப ஜனதிபதி ஆகியோர் சென்றுதமது இறுதி மரியாதையைச் செலுத்தினர். நிசாமின் சடலம் அவரது தாயார் அடக்கம் செய்யப்பட்ட இடத்துக்குப்பக்கத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

---

## தி. மு. க. ...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அவர் மேலும் கூறியதாவது: சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தை எதிர்த்த தி. மு. க. அந்த ஒப்பந்தம் செயற்பட அனுமதிக்காது. சிங்களமக்கள் தமது அவ்வ நிலையை உணர்ந்து, தமது தாய்நாட்டை எதிர்நோக்கியுள்ள ஆபத்தைத் தவிர்க்க வேண்டும்.

---

## இந்தியாவின்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

திருமதி இச்திரா காந்தியின் பெயரே முன்னணியில் நின்றுலும் நாட்டில் எந்த நிலைமையை உறுதியுடன் சமாளிக்கக்கூடிய சக்தி வாய்ந்த ஒருவர் பிரதமராக வரவேண்டுமென்றும் திரு. சவான் அல்லது மொரார்ஜிதேசாய்தான் இதற்குப் பொருத்தமென்றும் சில வட்டாரங்களில் கருதப்படுகிறது.

---


## தேவை

வேலை

வர்த்தகஸ்தாபனக் கணக்குகள் எழுதுவதில் அனுபவமுள்ள ஒருவருக்குப் பகுதி நேர அல்லது முழு நேர வேலை தேவை. விளம்பர இல. 1582, ஈழநாடு மே/பா என எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 1582


---

# லோகசபை கட்சி நிலை

மொத்த ஸ்தானங்கள்- 521

இதுவரை வெளிவந்த மொத்த ஸ்தானங்கள்- 482

| | |
|---|---|
| காங்கிரஸ் | 263 |
| சுயேச்சை | 33 |
| சுதந்திரா | 43 |
| ஜனசங் | 34 |
| தி. மு. க. | 25 |
| கம்யூனிஸ்ட் (மார்க்ஸிய) | 19 |
| கம்யூனிஸ்ட்: | 20 |
| சம்யுக்த சோஷலிஸ்ட் | 23 |
| இதர கட்சிகள் | 22 |
| மொத்தம... | 482 |

---

# 'இந்தி திணிப்பு அண்ணுவுக்கு வெற்றியை அளித்துள்ளது'

## தமிழ்நாட்டில் தி. மு. க. வெற்றி குறித்து அமிர்தலிங்கம் மகிழ்ச்சி

யாழ்ப்பாணம், திங்கள் "இந்தித் திணிப்புக்கு எதிராகத்தமிழ்நாட்டில்உருவான கருத்துப் புரட்சியும் பதினெட்டுவருட காங்கிரஸ் ஆட்சியால் மக்கள் அடைந்த களைப்புமே அண்ணுவின் வெற்றிக்கும், இந்தப்பெரிய அரசியல் மாற்றத்துக்குகாரணம்" என்று தமிழரசுக் கட்சிப் பொதுச்செயலாளரும் வட்டுக்கோட்டை எம்.பி.யுமான திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக்கழகம் ஆட்சியைக் கைப்பற்றியது குறித்து அவர் மகிழ்ச்சிதெரிவித்தார். நமதுநிருபரிடம்அவர் அதுபற்றி கருத்துத் தெரிவிக்கையில் மேலும் குறிப்பிட்டதாவது:- திராவிட முன்னேற்றக்கழகம் கடந்த பதினெட்டு ஆண்டுகளாகத் தமிழ்நாட்டு அரசியலில் இளைஞர்களுடைய சிந்தனையைத்தூண்டும்பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தது. இப்போது பழுத்தஅரசியல் ஞானியான இராஜகோபாலாச்சாரியாரின் ஆலோசனையைக் கொண்டு அறிஞர் அண்ணுதுரை அதிகாரத்துக்கு வந்திருப்பதை தமிழ்மீது அன்புள்ளவர்கள் வரவேற்பார்களென்பதில் சந்தேகமில்லை. தமிழ் நாட்டில். காங்கிரஸ் அக்கிராசனர் காமராஜரின் தோல்வி குறித்து திரு. அமிர்தலிங்கம் பெரிதும் கவலை தெரிவித்தார்.

"காமராஜர் தோல்விதமிழினம் பெரிதும்துக்கப்படவேண்டியதொன்று. இந்தியாவின் ஆட்சி பீடத்தையே ஆட்டிவைக்கக் கூடிய விதத்தில் தொண்டராகவும் தியாகியாகவும் இருந்துபணிபுரிந்த ஒரு தமிழரின்தோல்வி வேதனையை அளிக்கிறது" என்று அவர்கூறினர்.

---

## யானையைக் கொன்றுராம்

புத்தளம், ஞாயிறு இகல புளியங்குளம் என்னுமிடத்தைச் சேர்ந்த திரு. எம்.ரன்ஹாமி என்பவர், அவருடைய வயலைச் சேதப்படுத்திய யானையை அனுமதியின்றிச் சுட்டுக் கொன்றதாகப் புத்தளம் வன விலங்குப் பாதுகாப்பு அதிகாரி திரு.எட்மண்ட் திசேரா புத்தளம் கோர்ட்டில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இவ் வழக்கு விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்பட்டபோது, எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டார். "சந்ததி அழிந்து விடாது பெருக்கத்தைப் பாதுகாக்க நாம் ஒவ்வொருவரும் மிருகங்களைக் கொல்லாதிருக்கவேண்டும். தற் பாதுகாப்புக்காகச் செய்தாலும், அனுமதிச் சீட்டின்றிக் கொன்றது குற்றமாகும்" எனக் குறிப்பிட்ட நீதவான் திரு. பிரேமவன்சா திலகரத்தின எதிரிக்கு ரூ.125அபராதம் விதித்தார்.


வியாபாரம் பெருக

விளம்பரம் செய்க


---



அகில இந்திய கர்நாடக இசைமேதையும், பிரபல திரைப்படப் பின்னணிப் பாடகருமான ஸ்ரீ பாலமுரளி கிருஷ்ணு, குமாரி அபயம் குழுவினரின் இன்னிசைக் கச்சேரி இன்று திங்கட்கிழமை மாலை யாழ்ப்பாணம் நகரசபை மண்டபத்தில் நடைபெறுகிறது. யாழ். அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தலைமையில் இலங்கை தியாகராஜ கான சமாஜத்தின் ஆதரவில் இக்கச்சேரி நடைபெறுகின்றது.

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org